பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 12 | வியாழக்கிழமை | 28.12.2023 | அதிர்வு 149

## பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

பாடசாலை மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டி, கல்பொட நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற 15 வயதுடைய பாடசாலை மாணவனே நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளார். 06▸

# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், இனப்பிரச்சினைக்குத் தீர்வு: நாடு இன்று நிறைவேற்ற வேண்டிய இரண்டு பிரதான பொறுப்புகள்

## வளமான ஐக்கிய இலங்கைக்காக புத்தாண்டில் ஒன்றிணைவோம்; அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி மீண்டும் அழைப்பு



"நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் இன்று நாடு நிறைவேற்ற வேண்டிய இரண்டு பிரதான பொறுப்புகளாகும். எந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் அந்த இரு இலக்குகளை அடைவதில் என்னுடன் இணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் மீண்டும் அழைப்பு விடுகின்றேன்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 07▸

# ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் முற்றாகப் பகிஷ்கரிப்பதே ஒரே தெரிவு

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. வலியுறுத்து

(கனகராசா சரவணன்)

"தமிழர்களின் அரசியல் உரிமையை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு விலைபோயுள்ள தமிழ்த் தரப்புகள்தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று கோரி வருகின்றன. எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல், அதனை முழுமையாகப் பகிஷ்கரிப்பதே தமிழ் மக்களுக்கு இருக்கின்ற ஒரே தெரிவு."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 06▸




## வலைஞர்மடத்தில் காணியில் இருந்து 4,500 துப்பாக்கி ரவைகள் நேற்று மீட்பு!



முல்லைத்தீவு, வலைஞர்மடத்தில் உள்ள வயல் காணி ஒன்றில் நேற்று ரி–56 வகை துப்பாக்கி ரவைகள் பெருமளவில் மீட்கப்பட்டுள்ளன.

4 ஆயிரத்து 500 துப்பாக்கி ரவைகள் இவ்வாறு 06▸




'வரமுன் காப்போம்' என்ற சமயோசித பண்பியல்பில் இலங்கையின் நிலைமை – சீத்துவம் – எத்தகையது என்பதற்கு இது நல்லதோர் உதாரணம்.

இலங்கையைப் பொறுத்தவரை சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் என்பது முன்பின் கண்டறியாத ஓர் அனுபவம். 2004 இல் அது தாக்கிய பின்னர்தான் அந்தப் பேரனர்த்தத்தின் – பேரவலத்தின் – மோசமான தாக்கத்தையும் விளைவையும் 06▸




# பசுமை இயக்கத்தின் கடற்கோள் நினைவுநாள் நிகழ்ச்சி மாதகல் கடற்கரையில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கடற்கோள் நினைவு நாள் நிகழ்ச்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாதகல் கடற்கரையில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் ம.கஜேந்திரன், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன், கலை-பண்பாட்டு பிரிவின் துணைச் செயலாளர் கை.சரவணன், வடமாகாண கடற்றொழிலாளர்கள் இணையத்தின் தலைவர் வி.சுப்பிரமணியம், எந்திரி ச.சர்வராஜா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். கடற்கோளில் பலியானவர்களுக்குக் கடலில் மலர் தூவி ஆரம்பமான இந்நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்தோனேசியா, சுமத்திரா தீவுக்கு அருகே கடலின் அடியில் 2004ஆம் ஆண்டு நொவம்பர் 26ஆம் திகதி நிகழ்ந்த பூகம்பத்தால் ஏற்பட்ட கடற்கோள் இந்து சமுத்திரக் கரையோர நாடுகளில் இரண்டே கால் இலட்சத்துக்கும் அதிகமானோர்களைப் பலியெடுத்தது. இலங்கையிலும் முப்பத்தையாயிரத்துக்கும் மேலானோர் பலியானார்கள். பலகோடி ரூபா சொத்து அழிவு ஏற்பட்டது. இலங்கையின் வரலாற்றில் தீராத வலியை ஏற்படுத்திச் சென்ற இந்நாளை இலங்கை அரசாங்கம் தேசிய பாதுகாப்புத் தினமாகக் கொண்டாடி வருகிறது. வடக்கு மாகாண சபை இந்நாளை இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் ஆண்டுதோறும் கடற்கோள் நினைவுநாளை இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாகக் கடைப்பிடித்து வருகிறது.

இதற்கு அமைவாக, மாதகல் விநாயகர் இறங்குதுறையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கடற்சூழலின் முக்கியத்துவம், அவற்றின் பாதுகாப்பு, இயற்கைப் பேரிடர்களைத் தணிவிக்கும் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வுரைகள் இடம்பெற்றமையோடு, நிகழ்ச்சியின் இறுதியில் அனைவரும் மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தினூடாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.














# கூண்டோடு சிக்கிய குடு ரொஷான்



மட்டக்குளி பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் பிரதான சந்தேகநபரான “குடு ரொஷான்” அவரின் சகோதரன் மற்றும் அவர்களின் மேலும் சில உறவினர்கள் வரக்காபொல பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு நபரிடமிருந்து 1 கிரோம் ஹெரோயின் போதைப்பொருளும் இன்னுமொரு நபரிடமிருந்து 875 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் காரணமாக இவர்கள் நுவரெலியா பிரதேசத்தில் வீடொன்றை எடுத்து அங்கு தங்கியிருந்துவிட்டு, பொலிஸாரின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துவிட்டது என எண்ணி மீண்டும் கொழும்புக்கு வந்துக்கொண்டிருந்தபோதே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கு இடமான இரு வாகனங்களில் சிலர் கொழும்பை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய காரொன்றும் வானும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவற்றிலிருந்து 10 ஆண்களையும், ஐந்து பெண்களையும், இரு சிறுமியர் உட்பட 08 குழந்தைகளையும் பொலிஸார் தமது பொறுப்பில் எடுத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் இவர்களில் 04 ஆண்களும், மூன்று பெண்களும் தற்போது மட்டக்குளி பொலிஸாரினால் தேடப்பட்டுவரும் போதைப்பொருள் வியாபாரிகள் என்பதும் – விசாரணைகளில் தெரியவந்துள்ளதாம்.

பொலிஸாரின் தரவு கட்டமைப்பை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, இவர்களில் 07 பேர் மீது இதற்கு முன்னர் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

# உருளைக்கிழங்குகளில் பக்டீரியா தாக்கம்; அறிக்கை கோருகிறார் விவசாய அமைச்சர்






யாழ்ப்பாணம் – குப்பிளான் பகுதியில் களஞ்சியப்பட்டுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்குகளில் ஏற்பட்ட பக்டீரியா தாக்கம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு அறிக்கையை உடனடியாக கையளிக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாய பணிப்பாளர் நாயகத்திற்கு அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார் என விவசாய அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பில் இருந்து விசேட குழுவொன்று யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியில் களஞ்சியப்பட்டுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்குகள் தொடர்பில் நேற்று ஆராய்ந்தது.

விவசாய அமைச்சு மற்றும் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் உயரதிகாரிகள் குறித்த குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இதன்போது, உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைக்கப்பெற்ற 21 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்குகளில் இவ்வாறு பக்டீரியா தாக்கம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விதை உருளைக்கிழங்குகள் அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், அதில் பக்டீரியா தாக்கம் ஏற்பட்டுள்ளமை கடந்த 17ஆம் திகதி கண்டறியப்பட்டது.

(மற்றொரு செய்தி 12ஆம் பக்கத்தில்)



# வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய ரதம்

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு – உடுத்துறை கடற் கரையில் படகில் அலங்கரிக்கப்பட்ட ரதம் ஒன்று நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

இது வெளிநாட்டில் சமய சம்பிரதாய நிகழ்வுகளில் பயன்படுத் துவதற்காக வடிவமைப்படும் ரதம் என்று அறியப்படுகின்றது.

இருப்பினும் இந்த ரதம் எவ்வாறு வந்தது, இது உண்மையில் என்ன விடயத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது போன்ற தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.








**இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்**
**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்**
**இணைந்து**



**“தாயகஒலி” பிரதம ஆசிரியர்**

***தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)***

**(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு**
**நடத்தும்**

## சிறுகதைப் போட்டி


**இருபிரிவுகளாக நடத்தப்படும்**
**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# புதிய கொரோனா தொற்றுத் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லையாம்



ஜே.என் 1 ஒமிக்ரோன் உப வைரஸ் திரிவு எனப்படும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் 19 வைத்தியசாலைகளில் இது தொடர்பான மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜே.என். 1 ஒமிக்ரோன் உப வைரஸ் திரிவு உலகின் 41 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதுடன், அது மிகவும் வேகமாக பரவியும் வருகின்றது.

இந்த வைரஸ் தொற்றினால் சர்வதேச ரீதியில் இதுவரை 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வைரஸ் தொற்றுக்குள்ளானோருக்கு தொடர்ச்சியான இருமல், சுவை மற்றும் வாசனை இழப்பு, அதிக காய்ச்சல், சோர்வு, வாந்தி உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் உரிய சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, புதிய கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில், நாட்டில் மீண்டும் பீ.சி.ஆர் பரிசோதனைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

# கைத்தொலைபேசி கொள்வனவு செய்வோருக்கு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அறிவுறுத்தல்



கையடக்கத் தொலைபேசியை கொள்வனவு செய்யும் போது, அந்த தொலைபேசி தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா பத்திரன குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் அந்த ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என அவர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஐஆநுஐ என பதிவு செய்து இடைவெளி விட்டு, 15 இலக்க ஐஆநுஐ எண்ணை பதிவு செய்து அதன் நம்பகத்தன்மையை சரிபார்க்க 1909 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்புமாறும் அவர் கோரியுள்ளார்.

# மலையகத் தமிழர்ளை கௌரவித்து முத்திரை வெளியிடும் இந்திய அரசு!

மலையக மக்களை கௌரவித்து இந்திய அரசினால் முத்திரை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் இவ்வாறு முத்திரை வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசனையின் பேரிலும், தமிழக பா.ஜ.க. தலைவர் கே. அண்ணாமலையின் ஏற்பாட்டிலும், மலையக மக்களை கௌரவிக்கும் வகையில், இந்திய தபால்துறை அமைச்சினூடாக முத்திரையொன்று வெளியிடப்பட்டு இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

புதுடில்லியில் இம்மாதம் 30 ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வின்போது, பாரதீய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி.நடாவினால், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானிடம் முதல் முத்திரை கையளிக்கப்படவுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தாற்பரியத்தையும் பட்டுணர்ந்தோம்.

இனி,எந்தச் சமயத்தில் அது தாக்கினாலும், கிட்டும் கொஞ்ச நேர முன் கால அவகாசத்தில் கரையோர மக்களை முற்கூட்டியே எச்சரிக்கும் ஒருமுறைமையை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும் என்ற பட்டறிவு நமக்குப் பிறந்தது.

அதன் அடிப்படையில், பெருஞ்செலவில் மக்கள் குடியிருப்புகளை அண்டிய கரையோர பிரதேசங்களில் 77 சுனாமி எச்சரிக்கை கோபுரங்களை அரசு அமைத்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆழிப் பேரலை தாக்கத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இந்த 77 கோபுரங்களின் இயங்கு தன்மை குறித்தும் ஆராய்ந்த அதிகாரிகளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

சுனாமி அல்லது ஆழிப்பேரலை தாக்கம் பற்றிய முன்னெச்சரிக்கைத் தகவல் கிடைத்ததும் இடர் முகாமைத்துவ மையத்திலிருந்து இந்த 77 கோபுரங்களையும் இயக்கி, மக்களுக்கு அபாய எச்சரிக்கையை விடுப்பதுதான் ஏற்பாடு.

ஆனால், இந்த 77 கோபுரங்களில் 57 கோபுரங்களில் எச்சரிக்கை செய்யும் முறை அடியோடு செயலிழந்து இருந்தது.

எஞ்சிய இருபதில் ஆக 11 கோபுரங்களை மட்டுமே இடர் முகாமைத்துவ நிலையத்திலிருந்து இயக்க முடிந்தது. மிகுதி ஒன்பது கோபுரங்களுக்கும் அவற்றை நெருங்கிச் சென்று செயல்படுத்த இயலுமாக இருந்ததாம்.

இவ்வளவுதான் நமது ஆபத்துக்கால முன்னெச்சரிக்கை – முன்னாயத்த – ஏற்பாடு.

நாடு உருப்பட்ட மாதிரிதான்...!

\+ + +

கடந்த 13ஆம் திகதியுடன் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் இனி ஜனவரி 9ஆம் திகதிதான் கூடும். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சுமார் ஒரு மாத விடுமுறை.

இருபத்தியைந்துக்கும் அதிகமான எம்.பிக்கள் இந்தக் காலகட்டத்தில் விடுமுறையில் வெளிநாடுகளுக்கு பறந்து விட்டனர் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களுள் அங்கஜன், சுமந்திரன் ஆகிய தமிழ் எம்.பிக்களும் அடக்கம்.

அதேசமயம் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பல மூத்த அதிகாரிகளும், எம்.பிக்கள் பலரும் தத்தம் குடும்பங்களுடன் நுவரெலியா மற்றும் பகுதிகளுக்கு விடுமுறையைக் கழிக்கப் படையெடுத்து இருக்கின்றனர் என்றும் தகவல்.

வழக்கமாக இத்தகைய வருட விடுமுறைகளை வெளிநாட்டில் கழிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்முறை இன்னும் ஓரிடத்துக்கும் புறப்படவில்லை. அவர் ஜனவரி நாலாம் தேதி வடக்கே விஜயம் செய்கின்றார். அதற்கு முன்னர் திடுதிப்பென ஏதேனும் நாட்டுக்கு அவர் விடுமுறைக்குப் பறந்தாலும் ஆச்சரியம் இல்லை.

அவர்களுக்கு என்ன, இங்கு அப்பாவிப் பொதுமக்கள்தான் ஜனவரி முதலாம் திகதியுடன் வரக்கூடிய புதிய வரி விதிப்புகளினால் கடிக்கப் போகும் தங்கள் பொக்கற் பற்றிய பீதியில் மூழ்கிக் கிடக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த வருட இறுதி விடுமுறை குறித்து சிந்திக்க திராணி எது...?

## ஜனாதிபதித் தேர்தலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கதை தமிழ் அரசியல் களத்தில் ஒரு சிலரால் பரப்பப்படுகின்றது.

அந்த விடயம் தொடர்பாக ஒரு சில தரப்புகள் பெயர்களைக் கூட முன்மொழிந்திருக்கின்றார்கள். குறிப்பாக சி.வி. விக்னேஸ்வரன் தானாகவே முன்வந்து, அனைத்துக் கட்சிகளும் இணங்கி தனது பெயரை முன்மொழிந்தால் அதனைப் பரிசீலிப்பதற்குத் தயார் என்று கூறியிருக்கின்றார்.

அதேபோன்று இவ்விடயம் தொடர்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒரு கருத்தையும், மனோ கணேசனைப் பொதுவேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று பிறிதொரு தரப்பினரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் ஊடகங்கள் இது பற்றிய எமது நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாகக் கோரி வரும் நிலையில், அதனை இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெல்லக்கூடியது ஏதேனுமொரு சிங்களத் தரப்பே என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது என்று நினைக்கின்றேன்.

இருப்பினும் அது யாராக இருப்பினும், கடந்த காலங்களில் தமிழர்களுடன் தொடர்புபட்ட அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல், பாதுகாப்பு, காணி அபகரிப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டப் பிரயோகம், அரசியல் கைதிகள் விடுதலை, வடக்கு – கிழக்கில் பௌத்த சிங்களமயமாக்கம் போன்ற பல்வேறு விடயங்களில் தமிழ் மக்களுக்குச் சார்பாகச் செயற்பட்டதில்லை.

அதேவேளை, அரசியல் தீர்வு விவகாரத்தில் அனைவரும் ஒற்றையாட்சியையும், அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தையும் வலியுறுத்துகின்ற நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இனியும் சிங்களத்தரப்புக்கு வாக்களித்து ஏமாறுவதற்குத் தயாராக இல்லை என்ற செய்தியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக உலகுக்குக் காட்ட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

இந்நிலையிலேயே தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. இதன் உண்மையான நோக்கம் என்னவென்பதை நாம் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால், சிங்கள வேட்பாளர் தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்பு இல்லாமல்போகும். அதன்படி இரண்டாம் விருப்பு வாக்கின் ஊடாக வெற்றி வாய்ப்பு தீர்மானிக்கப்படும். அவ்வேளையில் சிங்களத் தரப்பினர் பேரம்பேசுவதற்கு முன்வருவர். அப்போது பேரம் பேசி ஒரு தரப்பை ஆதரிப்பதற்கான தீர்மானத்தை எடுக்கலாம்.

எனவே, ஆதரிப்பதுதான் அவர்களுடைய நோக்கம். பேரம் பேசுவதாகக் கூறி இறுதியில் சிங்கள வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்பதைச் சகலரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை வலியுறுத்தி பேச்சில் ஈடுபடுகின்ற தரப்பினர், தமிழ் வேட்பாளரைக் களமிறங்குவதன் ஊடாகக் கிடைக்கப் பெறக்கூடிய பேரம் பேசும் ஆற்றலை உண்மையிலேயே தமிழர்களின் நலனுக்காகப் பயன்படுத்துவார்களா? தமிழர்களின் அரசியல் தீர்வை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு விலைபோயிருக்கின்ற தமிழ்த் தரப்புக்கள்தான் இப்போது தமிழ் வேட்பாளரைக் களமிறக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றனர்.

இந்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்தல் என்ற ஒரேயொரு தீர்வுதான் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. இதனை நாம் பல வருடகாலமாகத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். இருப்பினும் துரதிஷ்டவசமாக தமிழ்மக்கள் அதன் ஆழத்தைப் புரிந்துகொள்ளாமல், ஒவ்வொரு முறையும் போலியான கதைகளை நம்பி வாக்குகளை வழங்கி, ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள். எனவே, இம்முறை தமிழ் மக்கள் நன்கு சிந்தித்துத் தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்." – என்றார்.

## பாடசாலை மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)
நீர்வீழ்ச்சியில் நேற்று மதியம் நண்பர்கள் குழுவுடன் குளித்துக் கொண்டிருந்த மேற்படி மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடுகன்னாவ, பானபொக்கவைச் சேர்ந்த பசிந்து சாமோத் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த மாணவன் நண்பர்கள் குழுவுடன் ரயிலில் கல்பொடைக்கு வந்து கல்பொட நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்றபோது இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார்.

அவர் ஆபத்தான நிலையில் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வலைஞர்மடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மீட்கப்பட்டுள்ளன.

வலைஞர்மடம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலய வீதியிலுள்ள வயல் காணி ஒன்றில் குறித்த காணி உரிமையாளர் காணியில் மண்ணை அகழ்ந்தெடுக்கும்போது துப்பாக்கி ரவை பெட்டிகள் இருந்ததை அவதானித்துள்ளார்.

அதனையடுத்து அப்பகுதியில் உள்ள கடற்படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து துப்பாக்கி ரவைகளை மீட்டெடுத்துள்ளனர்.

இதன்போது ரி – 56 வகை துப்பாக்கி ரவைகள் அடங்கிய ஆறு பெட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

மொத்தமாக4ஆயிரத்து500துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பொருளாதாரத்தைக் கட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்தார்.

"நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் அதேவேளையில், நல்லிணக்கம் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு விரைவான



தீர்வுகளை வழங்க எதிர்பார்த்துள்ளேன். எதிர்வரும் மார்ச் மாதம் அது தொடர்பான விசேட அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்த்துள்ளேன்." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

பதுளை குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஒரேயொரு முஸ்லிம் தேசிய பாடசாலையான குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை பாடசாலை மாணவர்கள் அன்புடன் வரவேற்றனர்.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின் புதிய இணையத்தளமும் ஜனாதிபதியால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு சஞ்சிகையை பாடசாலை அதிபர் ஏ.ஏ.ஷமூனினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபெறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.

கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்துத் தெரிவித்த ஜனாதிபதி, நினைவுப் புத்தகத்தில் ஒரு குறிப்பொன்றை பதிவிட்டதோடு, கல்லூரி ஆசிரியர்களுடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது:–

"நாட்டின் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் வகையில், அரசு ஆரம்பித்துள்ள வேலைத் திட்டத்தைவலுவாகமுன்னெடுத்துச்செல்ல வேண்டும். அதற்கு உலக நாடுகளின் ஆதரவைப்பெற்றுள்ளோம்.இந்தவேலைத் திட்டத்துடன் நாம் முன்னோக்கிச் சென்றால்,நிச்சயமாகநாட்டில்நிலையானபொருளாதாரத்தை உருவாக்க முடியும். அதே நேரம் நாட்டின் ஏனைய பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

எனவே, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசியல் கட்சிகள் உட்பட அனைத்து தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என அழைப்பு விடுத்தேன். ஆனால் நாங்கள் எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. இந்த நாட்டில் இன்று தீர்க்கப்பட வேண்டிய இரு பிரதான பிரச்சினைகள் உள்ளன. அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எம்முடன் இணைந்து செயற்படுமாறு மீண்டும் கோரிக்கை விடுக்கிறேன்.

நாட்டில் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது முதல் விடயமாகும். இரண்டாவது விடயம் நாட்டின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகும். ஒரு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல, நாட்டில் நல்ல பொருளாதாரம் மற்றும் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அத்துடன் இலங்கையர் என்ற அடையாளம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அனைத்து மக்களும் இலங்கையர்களே. இன்று எமது நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சிங்கள அடையாளத்தையும், மதத்தையும், கலாசாரத்தையும் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல நாம் செயற்படுகின்றோம். ஏனைய இனத்தினரையோ, மதத்தினரையோ ஒருபோதும் சிறுமைப்படுத்தக்கூடாது. நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அனைவரும் இலங்கையர்களாக முன்னோக்கிச் சென்றால் மட்டுமே வளமான நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு ஏற்கனவே தீர்வுகளை வழங்கியுள்ளோம், ஏனைய பிரச்சினைகளுக்கும்தீர்வுகளைவழங்கிவருகின்றோம். அத்துடன், ஏனைய இனத்தவர்களின் பிரச்சினைகளிலும் அரசு கவனம் செலுத்தியுள்ளது. யுத்தம் நிறைவடைந்த போதிலும், ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளன. அரசு என்ற வகையில் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறோம்..

சிலர் தமது கிராமங்களை இழந்துள்ளனர். எனவே, 1985ஆம் ஆண்டு வரைபடத்தின் பிரகாரம் செயல்பட முடிவு செய்துள்ளேன். அந்த வரைபடத்தின்படி, தற்போது ஏதாவது கிராமம் காடுகளால் மூடப்பட்டிருந்தால், அந்த கிராமங்களில் உள்ள மக்கள் குடியேற அனுமதிக்க வேண்டும். அதன் உரிமையை அந்த மக்களுக்கு வழங்க வேண்டும். அதன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் ஏற்கனவே அந்த உரிமைகளைப் பெற்றுள்ளனர். இன்னும் சிலருக்கு அந்தப் பிரதேசங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை. நாங்கள் அந்தப் பிரச்சினைகள் தொடர்பில் தனித்தனியாக பணியாற்றி வருகின்



றோம். அத்துடன், காணாமல்போனோர் பிரச்சினை, இழப்பீடுகள் உட்பட இதுவரையில் தீர்க்கப்படாத சகல பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகின்றோம்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்தாலும், வலுவான பொருளாதாரம் இல்லை என்றால், மீண்டும் அதே பிரச்சினைகள் தலைதூக்கும். மலையகத் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, செயற்பட்டு வருகின்றோம். அவர்களுக்கு காணி, கல்வி மேம்பாடு உள்ளிட்ட உரிமைகளை வழங்க விசேட திட்டங்களை செயற்படுத்தியுள்ளோம்.

அத்துடன் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைச்சரவையில் கலந்துரையாடி, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். கொவிட் காலத்தில் இறந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வது தொடர்பான பிரச்சினை எழுந்தது. அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஏனைய நாடுகள் அது பற்றிய முடிவுகளை

08



## பொருளாதாரத்தைக் கட்டி....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிற்காலத்தில் மாற்றிக்கொண்டாலும், இலங்கையில் அந்த முடிவுகளை மாற்ற நீண்ட காலம் எடுத்தது.

அதற்கான காரணங்களை ஆராய்ந்து, அத்தகைய நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருக்க சட்ட ரீதியான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இறுதிச் சடங்குகளை எப்படிச் செய்வது என்பது அந்தந்த மதத்தின்படி முடிவு செய்யப்பட வேண்டும். இது குறித்து எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்க்கின்றேன்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர் விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதில் சில தவறுகள் நடந்திருந்தன. அது தொடர்பில் விசேட





கவனம் செலுத்தி செயற்படுகின்றோம். புத்தகங்கள் தருவிப்பது மற்றும் எகிப்தில் இருந்து போதகர்களை அழைத்து வருவது உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளன. முஸ்லிம் மதக் கல்விக்கு அவை முக்கியமானவை என்பதால் அந்தப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட வேண்டும். மத்ரஸாக்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமூலமொன்றை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அது முன்வைக்கப்படவில்லை. இதுபோன்ற முஸ்லிம் மக்களைப் பாதிக்கும் பல பிரச்சினைகள் உள்ளன. மேலும் சிலர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. வழக்குகள் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன.

பயங்கரவாதத்துடன் தொடர்பில்லாத பட்சத்தில், நாட்டில் புரட்சியை ஏற்படுத்த அழைப்பு விடுக்காதபட்சத்தில், கருத்துக்களை வெளியிட அனுமதிக்க வேண்டும். சட்டம் அந்த பாதுகாப்பை முழுமையாகவழங்கவேண்டும். இந்தவிடயங்களில் நாம்கவனம்செலுத்தியுள்ளோம். சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் அதிகாரிகளிடம் அறிக்கை கோரியுள்ளேன். அவற்றைப் பெற்றுக்கொண்ட பின்னர், எதிர்வரும்பெப்ரவரிமாதமளவில்முழுஅறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்க்கின்றேன். அதற்கு முன், மதத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் சந்தித்து, இந்த அனைத்து விடயங்கள் குறித்தும் ஆராய உள்ளேன். அதற்கு அனைவரும் ஆதரவளிப்பார்கள் என்று நம்புகின்றேன்.” – என்றார்.

முஸ்லிம் மதத் தலைவர்கள், கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மில், ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் ரோஹித அமரதாச மற்றும் மாகாண கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வாய்ப்பைப் பயன்படுத்துவோம்!

அரசியல் என்பது தந்திரமாக - சமயோசிதமாக - முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய ஒன்று.

அதில் ஈடுபடும்போது இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

ஒன்று - கிடைக்கும் வாய்ப்புகளை தந்திரமாக - சாதுரியமாக - பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்தது - பட்டறிவை அல்லது கிடைத்த முன் அனுபவத்தை நல்ல பாடமாகக் கொண்டு, செயல்பட வேண்டும்.

இது இரண்டும் விளங்காமல் வெறும் வறட்டு அரசியல் தத்துவங்களை - நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களை - கொள்கைக் கோட்பாடுகளாகப் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அதனால் எதையும் சாதிக்க முடியாது.

நமது அரசியல் தலைவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை அரசியலில் ஆயுத வலுச் சமநிலையில் தமிழர் தேசம் முன்னுக்கு நின்ற போது பின்னடைவுகளையும் இராணுவத் தோல்விகளையும் எதிர்கொண்டிருந்த சிங்கள தேசம் எப்படி நடந்து கொண்டது என்ற பட்டறிவு நமக்குத் தாராளமாக உண்டு.

தமிழர் தரப்புக்கு சமரச பேச்சுக்கு கொழும்பு அரசு வெற்றிலைவைத்து அழைத்து, வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்தது. தமிழர் தரப்பை இலங்கை அரசாகிய தன்னோடு சமதரப்பாக சர்வதேச மட்டத்தில் இருத்திப் பேசுவதற்கு இணங்கியது. தமிழர் ஒரு தேசிய இனம் என்பதை ஏற்றது. தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை அங்கீகரித்தது. தமிழர் தாயகத்துக்கு உள்ளக சுயநிர்ணைய உரிமையைக் கூட சர்வதேச மட்டத்தில் அது ஒப்புக் கொண்டது. அதன் அடிப்படையில் சமஷ்டி தீர்வை தரவும் முன் வந்தது.

அந்தச் சமயத்தில் இலங்கையின் ஒற்றை ஆட்சி அரசமைப்பு, ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை என்பவை குறித்து எல்லாம் அது தத்துவம் பேசிக் குழப்பாமல், அவற்றையெல்லாம் தாண்டி மேற்படி விடயங்களுக்கு அது இணங்கியதாகக் காட்டிக் கொண்டது.

ஆனால் இன்று...? நிலைமை வேறு.

இராணுவ ரீதியில் தமிழர் தரப்பின் பலம் இன்று பூஜ்யம். அதைப் புரிந்து கொண்டு இன்று எல்லாவற்றையும் அது அடியோடு மறுத்து, பேரினவாத மேலாண்மைத் திமிரோடு எகத்தாளம் பண்ணுகிறது.

இராணுவ வலுச் சமநிலையில் பின்னடைவு கண்டிருந்த சமயத்தில் - இந்த மிலேனியத்தின் ஆரம்பத்தில் - கொழும்பு அரசு எப்படிப் பதுங்கிக் காய் நகர்த்தியது என்பதை நாம் பட்டறிந்துள்ளோம்.

இப்போது தமிழர் தரப்பும் மிகப் பலவீனமாக உள்ளது. தீர்வுக்காகப் போராடவோ பேரம் பேசவோ வலுவற்ற நிலைமை. இச்சமயத்தில் நாம் தந்திரமாக நடக்க வேண்டும். தேவை வரும்போது நாணல் போல வளையவும் வேண்டும். சூழல் கிட்டும் போது உருக்கு போல எதிர்த்து வலுவாக நிமிர்ந்து நிற்கவும் வேண்டும்.

எப்போது நாணல் போல வளைவது, எப்போது உருக்குப் போல முறுக்குக் கொண்டு திடமாக நிற்பது என்பதை சரியாக முடிவு செய்யாவிட்டால் இழப்புக்கள்தான் மிஞ்சும். அதையும் கூட பட்டறிந்திருக்கின்றோம்.

வரப் போகின்ற ஜனாதிபதி தேர்தல் அத்தகைய தந்திரத்தை நாம் சரிவர பயன்படுத்த வேண்டிய ஓர் அருமையான வாய்ப்பு.

1956லிருந்து தேர்தல்கள் மூலம் - வாக்குகள் வாயிலாக - பல விடயங்களை சர்வதேசத்திற்கும் சிங்களத்துக்கும் நாம் காட்டியாகிவிட்டது. அவை எவற்றையும் பார்த்து சர்வதேசமும் எங்களுக்கு நியாயம் தேடித் தரவில்லை. சிங்களமும் நியாயம் செய்யவில்லை.

இந்த முறை ஜனாதிபதி தேர்தலை உலகுக்குக் காட்டவும், சிங்களத்துக்குப் பாடம் படிப்பிக்கவும் பகிஷ்கரிப்போம் என்ற பேச்சு உப்புச் சப்பற்ற - பொருத்தமற்ற - நடவடிக்கை. பட்டறிவிலிருந்து பாடம் படிக்காத அறிவிலித்தனம். கிடைக்கும் வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தாமல் விடும் முட்டாள்தனம்.

2015 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களாகிய நாம் எமது வாக்குகளைப் பயன்படுத்தி சிலவற்றை வெளிப்படுத்தினோம். அதன் மூலம் எதையும் சாதிக்க முடியாமல் போனமை துரதிஷ்டமாயினும் சிங்களத்தை ஒரு புதிய அரசமைப்பு நகல் வரை உந்தித் தள்ளினோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இன்னும் பத்து மாதங்களுக்குள் அடுத்த ஜனாதிபதி தேர்தல். 2010 இலும், 2019 இலும் நிலவியமை போன்ற பேரினவாத எடுப்பு அல்லது பௌத்த - சிங்கள இனவாதிகளின் ஒன்று திரள்கை இம்முறை இது வரை இன்னும் இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தை எப்படி இன்னொரு தடவை நல்ல வாய்ப்பாக மாற்றிக் கொள்வது என்பதைத் தான் தமிழ்த் தலைமைகள் சிந்தித்து, முடிவு செய்து காரியமாற்ற வேண்டும்.

வாய்ப்புக்களை சமயோசிதமாகப் பயன்படுத்தி மேலெழுவதுதானே அரசியல்...!

# இந்தியாவில் அதிகரிக்கும் ஜே.என் 1 பாதிப்பு: ஒரே நாளில் 529 பேருக்கு கொரோனா தொற்று

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 529 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியா முழுவதும் தற்போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 4,093 ஆக அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது.

புதிதாக பரவி வரும் கொரோனா ஜே.என்.1 திரிபு வைரஸ் குளிர் காலத்துக்கு பின்னர் அதிகரித்திருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில், கொரோனா ஜே.என்.1 திரிபு வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 109 ஐ எட்டியுள்ளது.



இந்த பாதிப்பால் கர்நாடகா, கேரளா, கோவா, குஜராத், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் அதிகளவு பாதிக்கப்பட்டிருக்கின்றனர் கூறப்படுகிறது.

குஜராத்தில் 36 பேரும், கர்நாடகாவில் 34 பேரும், கோவாவில் 14 பேரும், மகாராஷ்டிராவில் 9 பேரும், கேரளாவில் 6 பேரும், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து தலா நான்கு பேரும் மற்றும் தெலுங்கானாவில் இரண்டு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான நோயாளிகள் தற்போது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 529 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியா முழுவதும் தற்போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண் ணிக்கை 4,093 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கர்நாடகாவில் இருவரும், குஜராத்தில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என கூறப்படுகிறது.

# வட இந்தியாவில் அடர்த்தியான பனி மூட்டம்: 110 விமானங்கள், 25 ரயில் சேவைகள் பாதிப்பு



இந்தியாவின் வடமாநிலங்களில் கடந்த சில நாட்களாக கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது.

குறிப்பாக, டில்லியில் நிலவிவரும் கடுமையான பனிமூட்டம் காரணமாகப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், வீதியில் பயணிக்கும் வாகனங்கள் கண்ணுக்கு புலப்படாததால் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டபடியே வாகனங்களை சாரதிகள் இயக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, கடும் பனிமூட்டம் காரணமாக டில்லியில் விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. எவ்வாறு இருப்பினும் டில்லியில் காற்றின் தரம் சற்று அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ரஷ்யாவுக்கு விஜயம்!

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் 5 நாள் சுற்றுப்பயணமாக ரஷ்யாவுக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவை சந்தித்து கலந்துரையாடி யுள்ளார்.

இதன்போது, வர்த்தகம், எரிசக்தி, பாதுகாப்பு ஆகிய துறைகளில் ஒத்து ழைப்பை ஏற்படுத்திக்கொள்வது குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.



# காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 241 பேர் கொல்லப்பட்டுள்ளனர்





காசாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையால் கடந்த 24 மணி நேரத்தில் 241பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்குக் கரையில், துல்கரேமில் உள்ள நூர் ஷம்ஸ் அகதிகள் முகாமில் ஒரே இரவில் இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் 6 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், அந்த 24 மணிநேரத்தில் 382 பேர் காயமடைந்துள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

11 வாரங்களுக்கும் மேலாக நடந்துவரும் மோதலில் குறைந்தது 20 ஆயிரத்து 915 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேநேரம் அதில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள் மற்றும் பெண்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காசா போர் தனது மக்களுக்கு எதிரான கடுமையான குற்றம் என பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் கூறியுள்ளார்.

இதேநேரம் ஹமாஸுடனான மோதல் இன்னும் பல மாதங்களுக்கு தொடரும் என்று இஸ்ரேல் ராணுவத் தலைவர் ஹெர்சி ஹலேவி தெரிவித்துள்ளார்.

அதன்படி நேற்று முன்தினம் 100 இற்கும் மேற்பட்ட தளங்களை தாக்கிய தாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

# சீனாவில் விண்ணிற்கு ஏவப்பட்ட ரொக்கெட் வெடித்து சிதறியது





சீனாவில் விண்ணிற்கு ஏவப்பட்ட ரொக்கெட் சில நிமிடங்களில் கீழே விழுந்து வெடித்து சிதறிய சம்பவம் அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து லாங் மார்ச்-11 கேரியர் ரொக்கெட் விண்ணில் ஏவப் பட்டது.

விண்வெளி தொழில்நுட்ப சோதனைகளை மேற்கொள்ள செயற்கைக் கோள்கள் ஏவப்பட்டன.

லாங் மார்ச்-11 ரொக்கெட் 20.8 மீட்டர் நீளமும், 2 மீற்றர் விட்டமும், 58 மெட்ரிக்தொன் எடையும் கொண்டது.

இது குறைந்த புவி சுற்றுப்பாதை அல்லது சூரிய-ஒத்திசைவு சுற்றுப் பாதைக்கு செயற்கைக் கோள்களை கொண்டு செல்லும் திறன் கொண்டது.

விண்ணில் சீறிபாய்ந்து சென்ற லாங் மார்ச்-11 ரொக்கெட்டில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு திசை மாறி விண்ணில் இருந்து பூமியை நோக்கி வந்தது.

ரொக்கெட்டின் பூஸ்டர்கள், அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் விழுந்து வெடித்து சிதறியது. இதனால் அங்கு தீ பிழம்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் இந்த விபத்துக்கான காரணங்கள் தொடர்பில் விஞ்ஞானிகள் ஆய்வினை மேற்கொண்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.




# பழுதடைந்த விதை உருளைக்கிழங்கு விவகாரம்: உயர்மட்டக் குழு நேரில் பார்வையிட்டு மதிப்பீடு!



யாழ்ப்பாணம் குப்பிளானில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்கு தொற்றுக்குள்ளானமை தொடர்பாக ஆராய கொழும்பில் இருந்து விசேட குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது.

விவசாய அமைச்சு மற்றும் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் உயரதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெட்ரிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் குப்பிளானில் அண்மையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த விதை உருளைக் கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்திற்குள்ளாமையினால் பழுதடைந்திருந்தமை கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

இந்த பக்டீரியா தாக்கத்தினால் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக் கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இவ்விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், களஞ்சியப்பட்டுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்கு தொடர்பாக ஆராய கொழும்பில் இருந்து விசேட குழுவொன்று நேற்று விஜயம் செய்து விடயங்களைப் பார்வையிட்டனர்.

விவசாய அமைச்சின் விவசாயத் தொழில் நுட்ப பணிப்பாளரும் நவீன மயமாக்கல் திட்டம் பிரதிப்பணிப்பாளருமாகிய அனுர வியதுங்க, வட மாகாண விவசாய நவீன மாக்கல் திட்டத்தின் பிரதி மாகாண திட்டப்பணிப்பாளர் வி.விஜிதரன், விவசாய விஞ்ஞானி டபிள்யூ டி. லெஸ்லி, நவீன மயமாக்கல் திட்ட உள்ளக கணக்காய்வாளர் டபிள்யூ.ஏ.ஜி.வீரசிங்க, யாழ்ப்பாண உருளைக்கிழங்கு நவீன மயாக்கல் திட்ட சங்கத்தின் தலைவர் எஸ்.துசியந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேசிய தாவர தடுப்பு காப்பு சேவையின் ஆலோசனையின் பின்னர் உருளைக்கிழங்கு விதைகள் தொடர்பாக முடிவு எட்டப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.







# நெல்மூட்டைகள், பசளைகள் களஞ்சியத்திலிருந்து திருட்டு

## சம்மாந்துறையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 10 நெல் மூட்டைகள் மற்றும் இரு பசளை மூடைகள் கதவு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடங்கா 2 கிராம சேவையாளர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையில் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழு புலன்விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# போதகர் ஜெரோமின் விளக்கமறியல் நீடிப்பு

மதங்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போதகர் ஜெரோம் கிறிஸ்டோபர் பெர்னாண்டோவை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்ரா ஜயசூரிய நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய அறிக்கைகள் அடங்கிய இறுவெட்டை அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தன் தரப்பு வாதங்களை முன்வைத்ததுடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்பில் சர்வதேச அரசியல் மற்றும் மத ஒருமித்த சட்டத்தின் கீழ் மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் எனத் தெரிவித்துள்ளது.

# தந்தை, மகன் இருவரையும் தாக்கிக் காயப்படுத்தினராம்

## ஒருவர் கைது; மற்றவர் தப்பினார்

தனமல்வில பிரதேசத்தில் தந்தை மற்றும் மகனை இனந்தெரியாத இரு நபர்கள் கூரிய ஆயுதங்கள் மற்றும் இரும்பு கம்பியால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் 15 வயதுடைய சிறுவன் மற்றும் 56 வயதுடைய தந்தையாவார்.

இவர்கள் காயமடைந்த நிலையில் தனமல்வில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் தந்தை மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் மற்றொருவர் தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# பொது வேட்பாளராகக் களம் இறங்க தயாசிறி ஜயசேகரவும் கூடத் தயாராம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தானும் பொது வேட்பாளராகப் போட்டியிடத் தயாராக இருக்கின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இடதுசாரி கட்சிகளுக்கு வேட்பாளர் ஒருவர் இல்லை என்பதுடன் அவர்கள் கைவிடப்பட்ட நிலைமையில் உள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு அணி ஆகிய தரப்புகளுக்கு ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் இல்லை.

இதனால், இந்த அணிகளின் விருப்பம் மற்றும் இணக்கத்துடன் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன வேட்பாளராக போட்டியிடத் தயார்.

1950 ஆம் ஆண்டுகளைச் சேர்ந்தவர்களே தற்போது நாட்டை ஆட்சி செய்கின்றனர்.

அவர்களுக்கு தற்போதைய இளைய தலைமுறையின் எண்ணங்கள் மற்றும் அபிலாஷைகள் பற்றிய எந்த புரிதலும் இல்லை எனவும் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

# துறைமுக ஊழியர் தொழிற்சங்க நடவடிக்கைக்கு தடை உத்தரவு

துறைமுக அதிகாரசபையின் தொழிற்சங்கங்கள் இன்றைய தினம் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் துறைமுக ஊழியர்களின் சம்பள உயர்வு அறிவிக்கப்படவில்லை.

அதுதொடர்பான வேலைத்திட்டத்தை அடுத்த 7 நாள்களுக்குள் அறிவிக்குமாறும், இல்லையேலின்று 28ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளதாக துறைமுக பொது ஊழியர் சங்க பொதுச் செயலாளர் நிரோஷன் கோரகான அண்மையில் தெரிவித்தார்.

இன்று துறைமுக அதிகாரசபையின் தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தயாராக இருந்தநிலையிலேயே குறித்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




# அம்பாந்தோட்டையில் ஒருவர் யானைத் தாக்குதலில் மரணம்

அம்பாந்தோட்டை, ரன்மினி தென்ன பிரதேசத்தில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பலாங்கொடை பிரதேசத்தை சேர்ந்த எச்.எம்.டி. சந்திரசேன என்ற 62 வயதுடையவராவார்.

இவர் மூன்று நாள்களுக்கு முன்னர் தனது மருமகனின் வீட்டிற்கு வந்த நிலையில் மருமகனின் பண்ணையை பாதுகாத்துக்கொண்டிருக்கும் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



# ஐ.தே.கவின் முதல் பிரசாரக் கூட்டம் கொழும்பில் பெருமெடுப்பில் நடக்கும்

2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி நாடு முழுவதும் பிரசாரக் கூட்டங்களை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 19ஆம் திகதி கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு பிரதான கூட்டமொன்றை நடத்திய பின்னர் நாடு முழுவதும் கூட்டங்களை நடத்த ஐ.தே.க. திட்டங்களை வகுத்துள்ளது.

கட்சியின் உயர்பீடக் குழுவுக்கான உறுப்பினர்கள் மற்றும் குழுக்களுக்கான உறுப்பினர்கள் அடுத்த மாதம் ஆரம்பத்தில் நியமிக்கப்படவுள்ளனர் எனக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் வாக்களிப்பு முகவர் நிலையத்துக்கு பொறுப்பானவர்களை நியமிக்கும் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஆறு பிரதிநிதிகளை நியமிக்கவும் ஐ.தே.க. திட்டமிட்டுள்ளது.

ඒක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
United National Party

இதேவேளை, எதிர்வரும் மாதத்தின் ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தும் விசேட அதிகாரமிக்க குழுவொன்றையும் ஐ.தே.க. நியமிக்க உள்ளது. இதனை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ உறுதிப்படுத்தியுள்ளார்.





# பெரிய வெங்காயத்தின் விலை மேலும் குறையும்

## மூன்று நாடுகளிலிருந்து இறக்குமதி

பெரிய வெங்காயத்தின் விலை மேலும் குறைவடையும் என பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தானிலிருந்து இந்த வாரம் பெருமளவு பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டவுள்ளதுடன், அடுத்த மாதம் சீனா மற்றும் நெதர்லாந்திலிருந்தும் பெரிய வெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதன்காரணமாக பெரிய வெங்காயத்தின் விலை வெகுவிரைவில் குறைவடையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரிய வெங்காய தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில், பாகிஸ்தான், சீனா, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பெரிய வெங்காயம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமை, 380 ரூபாவிற்கு மொத்த வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர் எனவும் இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர்.

350 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயமே, இவ்வாறு 380 ரூபாவிற்கு மொத்த வியாபாரிகளுக்கு வழங்கப்படுகிறது.

பெரிய வெங்காயத்தின் சில்லறை விலையாக 405 ரூபா முதல் 420 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# இறக்குமதி மருந்துகளை விடுவிக்க சுகாதார அமைச்சினால் விசேட குழு

இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை துறைமுகத்தில் இருந்து விடுவிப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி குழு நேற்று முதல் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சின் செயலாளர், விசேட வைத்தியர் பாலித மஹீபால குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பதிவு செய்வதற்கான கால எல்லையைக் கடந்துள்ள மருந்துகளுக்கான காலத்தை எதிர்வரும் ஜூன் மாத இறுதி வரை நீடித்துள்ளதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.





# 'யுக்திய' சுற்றிவளைப்பு மீண்டும் நேற்று ஆரம்பம்

போதைப்பொருள் கடத்தல்காரர்களை கைது செய்வதற்காக முன்னெடுக்கப்படும் யுக்திய சுற்றிவளைப்பு நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சகலரையும் சட்டத்திற்கு முன் நிறுத்தும் வரையில் இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டமையால் கடந்த இரு தினங்கள் யுக்திய சுற்றிவளைப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இதுவரை ஒரு வாரத்தில் 13 ஆயிரத்து 666 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 717 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர்.




# வடக்கில் சிறிய - நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு இந்தியா உதவிகளைச் செய்யத் தயாராகவுள்ளது

## யாழில் வர்த்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்து துணைத் தூதர் உரை

வடக்கில் சிறிய - நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு இந்தியா உதவிகளைச் செய்யும் என யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணை தூதுவர் ராகேஸ் நட்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கலாச்சார மத்திய நிலையத்தில் இந்தியத் துணைத்தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ் வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிறிய நடுத்தர வர்த்தக கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியாவை பொறுத்தவரை சிறிய - நடுத்தர உற்பத்தியாளர் 40 வீதமான பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்பை செய்கின்றார்கள். அதேபோல் ஏற்றுமதியில் 50 வீதமான பங்களிப்பை சிறிய நடுத்தர உற்பத்திகள் செய்கின்றன. அது மட்டுமன்றி வேலைவாய்ப்பு வழங்குவதிலும் இவர்களே முன்நிலையில் உள்ளார்கள்.

அவ்வாறான நிலையில் இலங்கையில் வடக்கு மாகாணத்திற்கும் சிறிய - நடுத்தர உற்பத்தியாளர்கள் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வகையில் தமது உற்பத்தியின் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதற்கு இந்தியா அதற்கான உதவிகளை செய்யமுடியும்.

பொருளாதார உற்பத்தியில் சரியான நடைமுறைகளை பின்பற்றி தர நிர்ணயங்களை செய்வதன் மூலம் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி கொள்ளமுடியும். இந்த கண்காட்சியில் 140 மேற்பட்ட விற்பனை காட்சிக் கூடங்கள் காணப்படுகின்றன.

இவை இன்னும் தரமாக, கவர்ச்சிகரமாக இருக்கும்போது - இந்தியா விற்கோ ஐரோப்பாவிற்கோ ஏற்றுமதி செய்யும் போது - பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும். இத்தகைய கண்காட்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் போது தொடர்பாடல்கள் அதிகரிக்கும். இவைதொடர வேண்டும். - என்றார்.

யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரன் உரையாற்றும் போது -

சிறிய - நடுத்தர முயற்சியாளர்களை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கும் வடக்கில் உள்ள உற்பத்தியாளர்களை ஏனையவர்கள் அடையாளம் கண்டு கொள்வதற்காகவுமே இந்தக் கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

வடக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இவர்கள் பங்களிப்பு முக்கியமானது. இந்த முயற்சியாளர்களை அடுத்த கட்டத்திற்கு தமது பொருள்களைக் கொண்டு செல்வதற்கு ஏற்ற ஒழுங்கமைப்புகளை செய்வதற்கு இந்தியா உதவி செய்ய வேண்டும்.

இந்தியாவின் உதவி தேவையானவர்கள் வணிகர் சங்கத்தையோ அல்லது இந்திய துணைத் தூதரகத்தையோ தொடர்பு கொள்ள முடியும். இந்த கண்காட்சியை ஒவ்வொரு வருடமும் நடத்துவதற்கு எண்ணியுள்ளோம். - என்றார்.













# கொழும்பில் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்கு வீடுகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம்

கொழும்பில் குடிசை வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் துரித வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள 26 தோட்டங்களில் 61 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர் என அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு வீடுகளை வழங்குவதற்கான புதிய யோசனை, அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன் கீழ் தோட்டங்களில் குடிசை வீடுகளில் வசிப்பவர்களுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்வாறு நிர்மாணிக்கப்படும் வீடுகளில் மக்களை குடியமர்த்தியதன் பின்னர், எஞ்சியுள்ள இடங்கள் முதலீட்டாளர்களுக்காக முதலீட்டு செயற்றிட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளன என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

செயற்றிட்டங்களுக்காக முதலீட்டாளர்களின் யோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மருந்துக் கொள்வனவு விசாரணை கணக்காய்வாளர் நாயகம் பூர்த்தி

மருந்து கொடுக்கல் - வாங்கல் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தால் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

விசேட விசாரணையின் அறிக்கையை சுகாதார அமைச்சுக்கு அனுப்ப எதிர்பார்த்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி .விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.




சுகாதார அமைச்சிடமிருந்து அதற்கான பதில் கிடைத்ததன் பின்னர் விசேட விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தரமற்ற மருந்து நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் தனது அறிக்கையில் தேடி ஆராய்ந்ததாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.12.2023

## மேஷம்

இன்றைய நாள் ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். திறம்பட அறிந்து உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். தியானம் மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும்.அதனை சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையிலான உறவில் நல்ல பிணைப்பு காணப்படுகின்றது.

இன்று வரவும் செலவும் இனைந்து காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இதனால் சிறந்த ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.

## ரிஷபம்

முன்னுரிமைப்படி செயல்களை செய்வதற்கு மனதில் தெளிவு கொள்ளுங்கள். விழிப்புணர்வுடன் செயல்களைச் செய்து வளர்ச்சி காண்பீர்கள்.

பணியில் புதிய வாய்ப்புகள் உற்சாகத்தை அளிக்கும். உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள்.

நெருங்கிய உறவினர் ஒருவரிடமிருந்து உங்களுக்கு பயனுள்ள ஆலோசனை கிடைக்கும். அது உங்கள் தாய் அல்லது தந்தையாகக் கூட இருக்கலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும்.

நிதி விஷயங்கள் இன்று சிறப்பாக காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சனை காணப்படாது. இன்றைய நாளை நீங்கள் மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம்.

## மிதுனம்

இன்று உங்கள் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். சிறப்புடன் செயலாற்ற மனதில் தெளிவு தேவை.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். அவர்களிடமிருந்து தக்க சமயத்தில் ஆதரவு கிடைக்கப்பெறுவீர்கள். அதன் மூலம் வளர்ச்சி காண்பீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை கழிப்பதன் மூலம் மன நிறைவைக் காண்பீர்கள்.

இன்று நிதி விஷயங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ள நாள்.

தொடைகளில் விறைப்புத் தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது.

## கடகம்

இன்று உங்கள் செயல்களில் மிகுந்த அக்கறை காட்ட மாட்டீர்கள். அதிர்ஷ்டத்தை நம்பாமல் சிறந்ததை செயலாற்ற முயலுங்கள்.

பணியில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் சுமுகமான உறவு காணப்படாது. தேவையற்ற பேச்சுகளைத் தவிர்க்கவும்.

இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல. உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால் பொறுமை இழக்காதீர்கள். இனி வரும் நாட்கள் சிறந்த நாட்களாக இருக்கும் என்று நம்புங்கள்.

நிதி விஷயங்களுக்கு இன்று சிறந்த நாளாக இல்லாத காரணத்தால் உங்களிடம் உள்ள பணத்தை வைத்து சமாளிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

## சிம்மம்

உங்கள் முடிவுகளை செயலாற்றுவதில் உறுதியாக இருப்பீர்கள், மனதில் உள்ள குழப்பத்தை நீக்கி விடுங்கள். உங்கள் முடிவுகளை, கவனமாக திட்டமிட்டு செயலாற்றுவது நன்மை தரும்.

உங்கள் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இருக்க வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை இருக்காது. அது உங்களுக்கு கவலையாக இருக்கும்.

மனதில் காணப்படும் உற்சாகம் காரணமாக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## கன்னி

இன்று சிறப்பான நாள். உங்களின் மனநிலையை சிறப்பாக பராமரித்து தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் வெற்றி கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு சீராக இருக்கும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.

## துலாம்

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். அதற்கான நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணியில் மாறுதல்கள் நேரலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும். நீங்கள் பணியில் மும்மரமாக செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்களின் சிறந்த உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி சம்பந்தமான பிரச்சினைகள் பாதிப்பை ஏற்படுத்தாது. நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. கால் வலியால் அவதிப்பட நேரும்.

## விருச்சிகம்

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். உங்கள் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டை பாதிக்கும் பதட்டத்தை கைவிடுங்கள்.

இலக்குகளை அடைவதற்கும் வெற்றியைப் பெறுவதற்கும் முறையாக திட்டமிடவேண்டியது அவசியம்.

திருமண திட்டங்கள் பற்றிய உரையாடல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள். இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல.

பணத்தை கவனமாக கையாள வேண்டும். பண இழப்பு அல்லது பணம் திருடு போகலாம்.

உங்கள் தாயின் உடல் நிலை பற்றி கவலைப் படுவீர்கள். அந்த வகையில் செலவுகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.12.2023




இன்று சிறந்த நாளாக இருக்காது. அசௌகரியங்கள் காணப்படும். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியில் உங்கள் நேர்மை பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற மோதல்கள் ஏற்படலாம். அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இல்லை. தேவையற்ற செலவுகளை கண்காணிக்கவும்.

இன்று அஜீரணம் மற்றும் வயிற்று உப்பசம் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். உண்ணும் உணவில் கவனம் கொள்ளுங்கள்.




விரக்தியான மன நிலையை தவிர்த்துவிட்டு மனதை மகிழ்ச்சியாக, அமைதியாக வைத்துக்கொள்ளுங் கள்.

பணியில் கூடுதல் சுமைகள் காணப் படும். பணியிடச் சூழல் மகிழ்ச்சியை அளிக்காது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள் ளது.

இன்று பண வளர்ச்சி குறைந்து காணப்படும். பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மியை தவிர்த்திடுங்கள். அது உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். உங்கள் சுய முயற்சி மூலம் கடினமாக உழைத்து வெற்றி பெறுவீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். சூழ்நிலையை திறமையாக கையாண்டு சவால்களை சமாளிக்க வேண்டும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டு மகிழ் வீர்கள். உங்கள் அணுகுமுறை உங்கள் பிரியமான வரின் பாராட்டைப் பெறும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. நீங்கள் கணிசமாக சேமிப்பீர்கள்.

கால் வலி மற்றும் தொடை வலி தவிர வேறு எந்த ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது. என்றாலும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.




இன்று விவேகத்துடன் யோசித்து செயல்பட வேண்டும். கடந்த காலத் தைப் பற்றிய யோசனையைத் தவிர்க்க வேண்டும். சாதகமற்ற சூழ்நிலையை யும் சமாளித்து அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே திட்டமிட்டு பணியாற்றுங்கள். அதிகரிக்கும் பணிச்சுமை காரணமாக வேறு வேலை தேடுவீர்கள்.

இன்று நீங்கள் காதலை எளிதாக எடுத்துக்கொள்வீர கள். இதனால் உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சாதரணமாக இருக்கும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park



# சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் உட்பட 6 பேருக்கும் தொடர்ந்தும் விளக்கமறியல் உத்தரவு

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட 6 பேர் மீளவும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யுனோக்ளோப்யுளின் மருந்து இறக்குமதி தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அத்துடன், தரமற்ற இம்யுனோக்ளோப்யுளின் மருந்து இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் கபில விக்ரமநாயக்க உள்ளிட்ட 04 பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# போதை தரும் லேகியம் விற்றவராம் ஆயுர்வேத மருந்து வர்த்தகர் கைது

## சாவகச்சேரிப் பொலிஸார் நடவடிக்கை

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் செவனகல லேகியம் என்ற போதையை ஏற்படுத்தக்கூடிய பொருளை விற்பனைக்காக வைத்திருந்த ஆயுர்வேத வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 3 கிலோ 720 கிராம் எடை கொண்ட எட்டு லேகிய பைக்கற்றுக்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸாரால் போதைப்பொருள் பாவனையாளர் என அடையாளம் காணப்பட்ட இளைஞர் ஒருவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் மேற்படி இளைஞன் தொடர்ச்சியாக இந்த லேகியத்தைப் பாவித்தார் என வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.




# நாடளாவிய மின்வெட்டு தமது தவறினாலேயே ஏற்பட்டதாக மின்சார சபை ஏற்றுக்கொண்டது

நாடளாவிய ரீதியில் அண்மையில் ஏற்பட்ட மின்வெட்டு தமது தவறினாலேயே ஏற்பட்டதாக இலங்கை மின்சார சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னிலையில் விடயங்களை முன்வைத்த போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த விடயம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஆணைக்குழு கூடவுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் மஞ்சுல பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொத்மலை முதல் பியகம வரையிலான மின் விநியோகக் கட்டமைப்பில் மின்னல் தாக்கம் ஏற்பட்டமையினால், கடந்த 09 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் மின்வெட்டு ஏற்பட்டது.

மின் விநியோகத்தை வழமைக்கு கொண்டுவர பல மணித்தியாலங்கள் கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார சபை தரப்பில் மறுப்பு

அண்மையில் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டுக்கான குற்றச்சாட்டை இலங்கை மின்சார சபை ஏற்றுக்கொள்வதாக வெளியான செய்திகளை மறுத்துள்ள இலங்கை மின்சார சபை, டிசம்பர் 9 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டுத் தொடர்பில் இரண்டு குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன எனத் தெரிவித்தது.

மின்சாரம் துண்டிக்கப்பட்டமைக்கான காரணம் தொடர்பான அறிக்கையை உரிய விசாரணைகள் நிறைவடைந்த பின்னரே வெளியிட முடியும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து உள்ளக விசாரணைக் குழுவும், வெளி விசாரணைக் குழுவும் விசாரணை நடத்தி வருவதாகவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக 13,897 ஏக்கர் பெரும் போக நெற்செய்கை அழிவு



**(பரந்தன்)**

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக சுமார் 13,897 ஏக்கர் பெரும் போக நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக அறிக்கை இடப்பட்டுள்ளது என மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் மழை வெள்ளம் காரணமாகவும் இரணைமடுக்குளத்தினது மேலதிக நீர் வெளியேற்றம் காரணமாகவும் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் போக நெற்செய்கையில் பெருமளவான பகுதிகள் அழிவடைந்துள்ளன.

குறிப்பாக கண்டாவளைப் பிரதேசத்தில் மூவாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன என விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெற்செய்கை அழிவு விவரங்கள் தொடர்பாகத் தகவல் வெளியிட்ட பிரதி ஆணையாளர்,

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக இந்தத் தகவல்கள் திரட்டப்பட்டன எனவும் அந்த தகவல்களுக்கு அமைய 13,897 ஏக்கர் அழிவடைந்துள்ளதுடன், 4461 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, இராமநாதபுரம், அக்கராயன்குளம், முழங்காவில், கண்டாவளை, பரந்தன், பூநகரி, புளியம்பொக்கணை, உருத்திரபுரம், பளை ஆகிய பத்து கமநல சேவை நிலையங்களின் கீழ் இந்த அழிவுகள் ஏற்பட்டுள்ளன எனவும், இந்த அழிவுகள் தொடர்பாக பரிசீலனை செய்யப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# ‘பொலநறுவை சைக்கிளோட்டம்’ மேலங்கி அறிமுகமும் ஊடக சந்திப்பும்

(நூருல் ஹுதா உமர்)

‘பொலநறுவை சைக்கிளோட்டம்’ தொடர்பான ஊடக சந்திப்பும், புதிய மேலங்கி அறிமுகமும் கடந்த திங்களன்று நடைபெற்றது.

மருதமுனை சைக்கிளிங் கிறீன் கழகத்தினால் பசுமையாக்கம், விதைப் பந்தாக்கம், சைக்கிளோட்டப் பாவனையை அதிகரித்தல், நஞ்சற்ற உணவு, காலநிலை மாற்றம் சம்பந்தமான விழிப்புணர்வுகளை மையமாகக் கொண்டு ‘பொலநறுவை சைக்கிளோட்டம’ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஊடக சந்திப்பும், புதிய மேலங்கி அறிமுகமும் கடந்த திங்கட்கிழமை இரவு மருதமுனை அல்–ஹிக்மா வித்தியாலயத்தில் நடைபெற்றது.



இந்த ஊடக மாநாட்டில், எம்.எப். ஹிபத்துல் கரீம் (புதிவாளர் ஊவா–வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்), கலாநிதி சத்தார் பிர்தௌஸ் (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்), எம்.எஸ்.எம். பசீல் (பொறியியலாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்), ஏ.எம். றியாஸ் அகமட் (தலைவர், உயிரியல் பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்), நைறுஸ் கான் ஹிதாயத்துல்லாஹ் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), அஷ்ஷெய்க் யு.எல்.எம். சாஜித் (கலாசார உத்தியோகத்தர்) ஆகியோர் விளக்கவுரைகளை வழங்கினர்.

‘பொலநறுவை சைக்கிளோட்டம்’ மருதமுனையில் இருந்து எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பித்து புதுக்குடியிருப்பு, ஏறாவூர், ஓட்டமாவடி, நாவலடி, புணானை, ரிதிதென்ன, வெலிகந்த, மன்னம்பிட்டி, கல்லெல்ல, கதுறுவல, பொலநறுவ, தம்பாளை, சுங்காவில் போன்ற பிரதேசங்களுக்குச் சென்று எதிவரும் 31ஆம் திகதியன்று மீண்டும் மருதமுனையை வந்தடையும்.

இந்தப் பயணத்தில் 20 சைக்கிளோட்டிகள் கலந்து கொண்டு பாடசாலை சுற்றாடல் கழகங்களைச் சந்திக்கவுள்ளனர். அத்துடன் இவர்கள் விதைப்பந்துகளையும் வீச உள்ளனர் என்பது குறிப்பிட்டத்தக்கது.



# தேசிய இளைஞர் கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது புத்தளம் அல்ரா பிளக்ஸ்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தளம் அல்ரா பிளக்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் இணைந்து நாடு தளுவிய ரீதியில் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் மகரகம இளைஞர் சேவைகள் மன்ற உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் புத்தளம் அல்ரா பிளக்ஸ் இளைஞர் அணியும், கம்பஹா சியனே இளைஞர் அணியும் மோதின.

இதில், 3 : 2 என்ற சுற்றுக் கணக்கில் புத்தளம் அல்ரா பிளக்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.




# நேற்று ஐயப்ப பக்தர்களின் இரு முடி பவனி யாழ் நகரில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.28

ஈழத்துச் சபரிமலை என அழைக்கப்படும் கோண்டாவில் ஐயப்ப பக்தர்களின் இரு முடி பவனி யாழில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் யானை, குதிரைகளுடன் நேற்று இடம்பெற்ற இந்த இரு முடி பவனியில் ஐயப்ப பக்தர்கள் பல ஆயிரம் பேரும் கலந்து கொண்டனர்.

பவனி யாழ் நகர் ஊடாக கோண்டாவில் ஐயப்பன் ஆலயம் வரையில் இடம்பெற்றது.

இந்த பவனி வலம்வந்த வீதிகளில் பல ஐயப்ப பக்தர்கள் நிறைகுடம் வைத்து, பவனியில் சென்றோரின் தாகசாந்தி தீர்த்தமையோடு விசேட பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.









